ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

தினமணி
வியாழக்கிழமை, 8 மே 2025

உடலை வளர்க்க குடலைக் கழுவு! குடலைக் கழுவி உடலை வளர்!
காந்தலாக்ஸ்
பேதி மாத்திரைகள்
மலச்சிக்கல், நீடித்த மலச்சிக்கல், மலச்சிக்கலால் வயிற்றுவலி, வயிற்று இரைச்சல், வயிற்று உப்பிசம், அஜீரணம், புளித்த ஏப்பம், அதிக உஷ்ணம், பித்தம், வாய்வு மற்றும் கீரைப்பூச்சிகள், நாக்குப் பூச்சிகளை நச்சுப் பொருட்கள் வெளியேறி குடல் தூய்மை பெறுகிறது.
Mfrs : டாக்டர் கே.எஸ்.கே சன்ஸ் கும்பகோணம்-612 001.
போன் : (0435) 242 1196, (0435) 242 0005.
எல்லா ஊர் மருந்து கடைகளிலும் கிடைக்கும்

போர்ப் பதற்றம்: உலக நாடுகளின் தலைவர்கள் கவலை

வாஷிங்டன்/மாஸ்கோ, மே 7: இந்தியா, பாகிஸ்தான் இடையே ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் குறித்து உலக நாடுகளின் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இரு நாடுகளுக்கு இடையிலான பகை விரைவில் முடிவுக்கு வரும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பஹல்காம் தாக்குதலுக்குப் பதிலடி அளிக்கும் வகையில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் 9 இடங்களில் பயங்கரவாத முகாம்களை குறிவைத்து புதன்கிழமை அதிகாலை இந்திய ஆயுதப் படைகள் ஏவுகணை மூலம் அதிதுல்லிய தாக்குதல் மேற்கொண்டன.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து ஐ.நா.பொதுச் செயலர் குட்டெரெஸ் கூறுகையில், 'இந்தியாவும், பாகிஸ்தானும் மிகுந்த ராணுவ கட்டுக்கோப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இருநாடுகளுக்கு இடையே ராணுவ மோதல் ஏற்பட்டால், அதை உலகத்தால் தாங்க முடியாது' என்றார்.

அமெரிக்க அதிபர் டிரம்ப்: இந்தியாவும் பாகிஸ்தானும் பல ஆண்டுகளாக சண்டையிட்டு வருகின்றன. இந்தப் பகை விரைவில் முடிவுக்கு வரும் என நம்புகிறேன் என்றார். இந்த மோதல் தொடர்பாக இரு நாடுகளுக்கும் வேறு எதையும் தெரிவிக்க விரும்பவில்லை என்றும் அவர் கூறிவிட்டார்.

ரஷிய வெளியுறவுத் துறை: இந்தியா-பாகிஸ்தான் இடையே ராணுவ ரீதியான மோதல்போக்கு தீவிரமடைந்து வருவது மிகுந்த கவலையளிக்கிறது. தெற்காசிய பிராந்தியத்தில் நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுக்க இருநாடுகளும் கட்டுக்கோப்பாக நடந்துகொள்ள வேண்டும். அமைதியான முறையிலும், அரசியல் மற்றும் ராஜீய வழியிலும் இருநாடுகளுக்கு இடையிலான பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தைக்கு உதவ பிரிட்டன் தயார்: பிரிட்டன் வர்த்தக துறை அமைச்சர் ஜோனதன் ரெனால்ட்ஸ் கூறுகையில், 'இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நண்பனாக பிரிட்டன் உள்ளது. போர் பதற்றத்தை தணிக்கவும், பேச்சுவார்த்தை மேற்கொள்ளவும் இந்தியா-பாகிஸ்தானுக்கு உதவ பிரிட்டன் தயாராக உள்ளது' என்றார்.

ஐக்கிய அரபு அமீரக துணைப் பிரதமர் ஷேக் அப்துல்லா: சர்வதேச மற்றும் பிராந்திய அமைதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய போர் பதற்றம் மேலும் அதிகரிப்பதை இந்தியா-பாகிஸ்தான் தவிர்க்க வேண்டும். தெற்காசியாவில் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்த பரஸ்பர புரிதலுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதை இரு நாடுகளும் கருத்தில் கொள்ள வேண்டும்.

கத்தார் வெளியுறவுத் துறை: ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படாத பிரச்னைகளுக்கு இந்தியா-பாகிஸ்தான் தீர்வு காண வேண்டும். பதற்றத்தை தணிக்க இருநாடுகளுக்கு இடையே தகவல் தொடர்பு வழிகள் தொடர்ந்து நீடிப்பது மிகவும் அவசியம்.

சீனா வருத்தம்

சீன வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'சீனாவின் அண்மை நாடுகளாக இந்தியாவும் பாகிஸ்தானும் உள்ளன. தற்போதைய பதற்றத்தை தணிக்க சர்வதேச சமூகத்துடன் இணைந்து ஆக்கபூர்வமாக பணியாற்ற சீனா தயாராக உள்ளது. அனைத்துவிதமான பயங்கரவாதத்தையும் சீனா எதிர்க்கிறது. இந்தியாவின் தாக்குதல் வருந்தத்தக்கது. என்று கூறியுள்ளது.

பாகிஸ்தான் ஆதரவு நாடான சீனாஇந்தியாவின்தாக்குதல் 'கண்டிக்கத்தக்கது' என்ற வார்த்தையைப் பயன்படுத்தாமல் இந்தியாவின் தாக்குதல் 'வருந்தத்தக்கது' என்ற வார்த்தையை பயன்படுத்தியது சர்வதேச அளவில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சருடன் அஜீத் தோவல் பேச்சு

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பயங்கரவாத முகாம்களை குறிவைத்து இந்திய ஆயுதப் படைகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் தொலைபேசியில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோவுடன் பேசினார்.

அப்போது தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்பாக ரூபியோவிடம் தோவல் விளக்கினார் என்று அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்தது. இதேபோல பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அசீம் மாலிக்கிடமும் மார்கோ ரூபியோ தொலைபேசியில் பேசினார். இதுதொடர்பாக மார்கோ ரூபியோ 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'இந்தியா–பாகிஸ்தான் இடையிலான சூழலை உன்னிப்பாக கவனித்து வருகிறேன். பிரச்னைக்கு அமைதியான தீர்வு காண இருநாட்டு தலைமையை தொடர்ந்து வலியுறுத்துவேன்' என்றார்.

ஐ.நா.வுக்கு பாக். தகவல்: பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பயங்கரவாத முகாம்களை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலை தொடர்ந்து ஏற்பட்டுள்ள சூழல் குறித்து ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலுக்கு பாகிஸ்தான் தெரியப்படுத்தியுள்ளதாக அந்நாட்டு ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவுக்கு இஸ்ரேல் ஆதரவு

பாகிஸ்தான் பயங்கரவாத முகாம்களைக் குறிவைத்து இந்தியா நடத்திய 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கைக்கு இஸ்ரேல் உறுதியான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் ருவென் அசார் 'எக்ஸ்' வலைதளத்தில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்று சுட்டிக்காட்டி வெளியிட்ட பதிவில், 'தங்கள் நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள இந்தியாவுக்கு உள்ள உரிமைக்கு இஸ்ரேல் ஆதரவு தெரிவிக்கிறது. அப்பாவிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் பயங்கரவாதிகள் எங்கு சென்றும் ஒளிந்து கொள்ள முடியாது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று கூறியுள்ளார்.

வங்கதேச வெளியுறவுத் துறை: இந்தியா–பாகிஸ்தான் இடையிலான போர் பதற்றம் ராஜீய வழியில் தணிக்கப்படும் என்றும், தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள மக்களின் நன்மைக்காக அமைதி நிலவும் என்றும் வங்கதேசம் நம்பிக்கை கொண்டுள்ளது.

சந்திப்பு...

'ஆபரேஷன் சிந்தூர்' பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை குறித்து விளக்கமளிக்க குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை புதன்கிழமை நேரில் சந்தித்த பிரதமர் நரேந்திர மோடி.

பிரதமரின் வெளிநாட்டுப் பயணம் ரத்து

புது தில்லி, மே 7: 'ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கைக்கு பிறகு இந்தியா-பாகிஸ்தான் இடையே உச்சகட்ட பதற்றம் நிலவும் சூழலில், மூன்று ஐரோப்பிய நாடுகளுக்கான பிரதமர் மோடியின் அரசுமுறைப் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

குரேசியா, நார்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் மே 13 முதல் 17-ஆம் தேதி வரையில் பிரதமர் மோடி அரசுமுறைப் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார். நார்வேயில் 'நார்டிக்' உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்கவும் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தச் சூழலில், பிரதமரின் மூன்று நாடுகள் சுற்றுப் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நாடுகளிடம் தகவல் தெரிவிக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.

எல்லையில் பாகிஸ்தான் தாக்குதல்: 13 பேர் உயிரிழப்பு

ஜம்மு/ஸ்ரீநகர், மே 7: பாகிஸ்தானில் பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய ராணுவம் மேற்கொண்ட 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கைக்கு பிறகு ஜம்மு-காஷ்மீரில் எல்லையோர கிராமங்களைக் குறிவைத்து அந்நாட்டுப் படையினர் சிறிய ரக பீரங்கிகள் மற்றும் மோட்டார் குண்டுகள் மூலம் அத்துமீறி தாக்குதலைத் தொடுத்தனர்.

ஜம்மு-காஷ்மீரின் உரி பகுதியில் சேதமடைந்த கட்டடம்.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் தொடங்கி புதன்கிழமையும் இடைவிடாமல் நீடித்த இத்தாக்குதலில் 4 குழந்தைகள் உள்பட பொதுமக்கள் 12 பேரும் ராணுவ வீரர் ஒருவரும் உயிரிழந்தனர்; மேலும் 57 பேர் காயமடைந்தனர். ஏராளமான வீடுகள் - வாகனங்கள் சேதமடைந்தன.

எல்லையில் சமீப ஆண்டுகளில் இல்லாத அளவில் பாகிஸ்தான் படையினர் நடத்திய இந்தத் தீவிர தாக்குதலுக்கு இந்திய ராணுவமும் வலுவான பதிலடியைக் கொடுத்தது. இதில் எதிரி படையினர் தரப்பில் பல உயிரிழப்புகள் நேரிட்டதாகவும், எங்கிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதோ, அந்த நிலைகள் அழிக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

13-ஆவது நாளாக அத்துமீறல்: இந்தியாவின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு பிறகு, ஜம்மு-காஷ்மீரில் எல்லையோர கிராமங்களைக் குறிவைத்து பாகிஸ்தான் படையினர் சிறிய ரக பீரங்கிகள் மற்றும் மோட்டார் குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தத் தொடங்கினர்.

ஏற்கெனவே கடந்த 12 நாள்களாக எல்லையில் சிறிய ரக ஆயுதங்கள் மூலம் பாகிஸ்தான் படையினர் அத்துமீறி துப்பாக்கிச்சூடு நடத்திவந்த நிலையில், செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் பூஞ்ச், பாரமுல்லா, ரஜௌரி குப்வாரா ஆகிய மாவட்டங்களில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டையொட்டிய கிராமங்களை நோக்கி தீவிர தாக்குதலைத் தொடுத்தனர்.

இதில் பூஞ்ச் மாவட்ட பகுதிகள் மோசமாக பாதிக்கப்பட்டன. இம்மாவட்டத்தின் மெந்தார், மன்கோட், கிருஷ்ண காட்டீ, குல்பூர், கெர்னி ஆகிய இடங்களை நோக்கி நடத்தப்பட்ட தாக்குதலில் 4 குழந்தைகள் உள்பட 12 பேரும், ராணுவ வீரர் ஒருவரும் உயிரிழந்தனர். இங்கு 42 பேர் காயமடைந்தனர்.

குருத்வாரா, பேருந்து நிலையம்...: உயிரிழந்தோரில் 3 சீக்கியர்களும் அடங்குவர். இவர்கள் குருத்வாராவில் இருந்தபோது, பீரங்கி குண்டுகள் தாக்கி இறந்துவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பூஞ்ச் பகுதி பேருந்து நிலையம் தாக்குதலுக்கு உள்ளானது. பேருந்துகளும், பிற வாகனங்களும் சேதமடைந்ததால் காயமடைந்தவர்களை சிகிச்சைக்கு அழைத்துச் செல்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டது.

பாரமுல்லாவின் உரி பகுதியில் 12 பேரும், ரஜௌரி மாவட்டத்தில் 3 பேரும் காயமடைந்தனர். இவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. குண்டுகள் விழுந்து வெடித்ததில், பல வீடுகள் தீக்கிரையாகின.

தாக்குதலால் பீதியடைந்துள்ள எல்லையோர மக்கள், தரைக்கு கீழ் அமைக்கப்பட்டுள்ள பதுங்குமிடங்களில் தஞ்சமடைதல் அல்லது வேறு பாதுகாப்பான இடம் தேடிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு, நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு வருகின்றனர்.

அதிதுல்லிய தாக்குதலில் இலக்குகள் அழிப்பு

ஆயுதப் படைகளுக்கு ராஜ்நாத் சிங் பாராட்டு

புது தில்லி, மே 7: 'ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளான பயங்கரவாத முகாம்கள் திட்டமிட்டபடி அதிதுல்லியமாக தாக்கி அழிக்கப்பட்டன' என்று பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் புதன்கிழமை தெரிவித்தார்.

பஹல்காம் தாக்குதலுக்குப் பொருத்தமான பதிலடி கொடுத்த ஆயுதப் படைகளின் துணிச்சலுக்கும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

பஹல்காம் தாக்குதலுக்குப் பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் 9 இடங்களில் பயங்கரவாதிகளின் முகாம்களைக் குறிவைத்து 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை இந்தியா செவ்வாய்க்கிழமை நள்ளிரவு நடத்தியது. இந்திய ஆயுதப் படைகளின் தீரச்செயல் அனைத்துத் தரப்பிலும் பாராட்டுகளைப் பெற்று வருகிறது.

இந்நிலையில், நாடு முழுவதும் 6 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் எல்லைச் சாலைகள் அமைப்பின் (பிஆர்ஓ) 50 உள்கட்டமைப்பு திட்டங்களைத் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சியில் புதன்கிழமை பங்கேற்று அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது:

ஆபரேஷன் சிந்தூர் மூலம் பயங்கரவாத பயிற்சி முகாம்களை அழித்து, பஹல்காம் தாக்குதலுக்கு ஆயுதப் படைகள் பொருத்தமான பதிலடியைக் கொடுத்துள்ளன. ஆயுதப் படைகளின் துணிச்சலுக்கு மரியாதை செலுத்துகிறேன்.

இந்தியா தனது மண்ணில் நடந்த தாக்குதலுக்கு மட்டுமே பதிலடி கொடுத்துள்ளது. எங்கள் நடவடிக்கை மிகுந்த சிந்தனையுடனும், அதிதுல்லிய அளவில் திட்டமிடப்பட்டது. இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் யாரும் காயமடையவில்லை.

பயங்கரவாதிகளின் வலிமையைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன், அவர்களின் முகாம்களைக் குறிவைத்து மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்பாவி மக்களைக் கொன்றவர்கள் மட்டுமே கொல்லப்பட்டுள்ளனர் என்றார்.

பல்வேறு மாநிலங்களில் பாதுகாப்பு ஒத்திகை

புது தில்லி, மே 7: நாட்டின் எல்லையோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் எந்தவொரு தாக்குதலுக்கும் தயாராக இருக்கும் வகையிலான பாதுகாப்பு ஒத்திகை புதன்கிழமை நடைபெற்றது.

பஹல்காம் தாக்குதலையடுத்து பாகிஸ்தானுடன் போர்ப் பதற்றம் நீடித்து வரும் நிலையில், எல்லையோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள சுமார் 300 மாவட்டங்களில் பாதுகாப்பு ஒத்திகை நடத்த மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த திங்கள்கிழமை உத்தரவிட்டது.

இதனிடையே, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் அமைந்திருந்த 9 பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய ராணுவம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு ஒரு மணியளவில் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

இதையடுத்து, தலைநகர் தில்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அங்கு பல்வேறு பகுதிகளில் போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்றது.

தமிழகத்தில் சென்னை துறைமுகம், கல்பாக்கம் அணுமின் நிலைய பகுதி, ஒடிஸாவில் 12 மாவட்டங்கள், கேரளத்தில் 14 மாவட்டங்கள் மற்றும் ஆந்திரத்தில் விசாகப்பட்டினம், தெலங்கானா மாநிலத்தில் ஹைதராபாதிலும், கர்நாடகத்தின் பெங்களூரிலும், அஸ்ஸாமில் 18 பகுதிகளிலும், மிஸோரம் மாநிலத்தில் ஐஸால் மாவட்டத்தின் சில பகுதிகளிலும், ஜார்க்கண்டில் 5 மாவட்டங்களிலும், மகாராஷ்டிரத்தில் மும்பை சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம் உள்பட பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 'ஆபரேஷன் அபியாஸ்' என்ற பெயரில் போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்றது.

பாதுகாப்பு ஒத்திகையின் ஒரு பகுதியாக, தில்லியில் புதன்கிழமை இரவு மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில், இருள் சூழ்ந்து காணப்படும் பழைய நாடாளுமன்றக் கட்டடம் உள்ள பகுதி.

புதுச்சேரியில் இலாசுப்பேட்டை விமான நிலையம் முன்னுள்ள ஹெலிகாப்டர் தளம், நீதிபதிகள் குடியிருப்பு அருகேயுள்ள ஒலிம்பிக் கூடம் ஆகிய இடங்களில் பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்றது.

இந்த ஒத்திகையை காவல் துறை அதிகாரிகள், தேசிய பேரிடர் மீட்பு படை, மாநில பேரிடர் மீட்பு படை, ரயில்வே பாதுகாப்பு படை, தீயணைப்புத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து நடத்தின.

அப்போது வான்வழித் தாக்குதல் நடந்தால் முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் விதமாக பொது இடங்களில் அபாய சைரன் ஒலியை ஒலிபெருக்கி மூலம் ஒலிக்கச்செய்யும் நடைமுறை பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது. மேலும், தாக்குதலின் விளைவாக மின்சாரம், இணையதளம் ஆகியவை முழுமையாக முடங்கினால் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்தும் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இதுதவிர, தாக்குதலின்போது இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டு அவர்களுக்கு உடனடி மருத்துவ சிகிச்சை அளிப்பது குறித்த ஒத்திகையையும் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டனர்.

GIC ஹவுசிங் :.பைனான்ஸ் லிட்.
கார்ப்பரேட் அலுவலகம்/ தலைமை அலுவலகம்: GICHFL, நேஷனல் இன்சூரன்ஸ் பில்டிங், 6வது தளம், 14, ஜாம்ஷெட்ஜி டாடா சாலை, சர்ச்கேட், மும்பை-400020. தொலைப்பேசி.: 022-43041900 மின்னஞ்சல்: corporate@gichf.com இணையத்தளம் : www.gichfindia.com
• சென்னை கிளை அலுவலகம்: எண். 480, கிவ்ராஜ் காம்ப்ளக்ஸ்-2, 2வது தளம், நந்தனம், அண்ணாசாலை, சென்னை-600035
தொலைப்பேசி : 044 4203 4896/97/99 மின்னஞ்சல் முகவரி : chennai@gichfindia.com அதிகாரப்பூர்வ அலுவலர்: 9894601538 & 9840873746

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

மின்னணு ஏல நாள்: 26-05-2025 / ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: 23-05-2025

இதன்படி, கீழே கையொப்பமிட்டுள்ளவர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 இன்கீழ் GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட் (GICHFL).-இன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்படி சட்டம் பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும், பின்வரும் கடன்தாரர்கள் / அடமானதாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகையை திருப்பி செலுத்த கோரினார். எனினும், கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் அந்த நிலுவைத்தொகையை திருப்பி செலுத்த தவறியமையால், பின்வரும் சொத்துக்களை மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14 மற்றும் இதன் தொடர்புடைய மேற்சொன்ன விதிகளில் விதி 8 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தி நேரடி சுவாதீனம் எடுத்துள்ளார்.

வ. எண்.	கடன் கணக்கு எண்/ கடன்தாரர் / கூட்டு கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர்	சொத்து முகவரி & சொத்தின் பரப்பளவு (கட்டுமானப் பரப்பளவு சதுர அடியில்)	கோரிக்கை அறிவிப்பு வெளியிட்டு நாள்	நேரடி சுவாதீன நாள்	07.05.2025 அன்றுள்ளபடி மொத்த நிலுவை (POS, வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட) (ரூபாயில்)	குறைந்த பட்ச கேட்பு விலை (ரூபாயில்)
1	TN0050610002159/ R ராஜேஷ் (கடன்தாரர்)	ஃபிளாட் எண். F-2, 1வது தளம், பிளாட் எண். XIII, செயிண்ட் பிரான்சிஸ் நகர், சர்வே எண். 39/2, 39/3, 39/5, 40/2 & 40/1c, கோவில்பதாகை கிராமம், ஆவடி நகராட்சி-600062. பிரிக்கப்படாத பங்கு : 294 சதுர அடி, மேல் கட்டுமானப்பரப்பளவு - 583 சதுர அடி	06-10-2017	21-10-2019	36,80,260/-	15,30,000/-
2	TN0050610002243/ ராமகிருஷ்ணா C (கடன்தாரர்)	பிளாட் எண்.09,ஜெயம் ஃபவுண்டேஷன், "மூக்கையா பிளாட்ஸ்'', ஃபிளாட் எண். F-1, 1ஆவது தளம், அய்யப்பா நகர், 1ஆவது தெரு, சர்வே எண் 81/1 & 82, புதிய சர்வே எண்.82/7, அயப்பாக்கம் கிராமம், அம்பத்தூர், சென்னை-600077 மேல் கட்டுமானப்பரப்பளவு - 460 சதுர அடி, பிரிக்கப்படாத பங்கு - 1045 சதுர அடி மேலேமூடப்பட்ட கார்நிறுத்துமிடத்துடன் கூடியது	15-05-2017	22-11-2024	95,74,661/-	38,00,000/-
3	TN0050610002248 GS நரசிம்மன் (கடன்தாரர்)	பிளாட் எண். 09, ஜெயம் ஃபவுண்டேச்ஷன், "மூக்கையா பிளாட்ஸ்'' ஃபிளாட் எண். F-3, 1ஆவது தளம், அய்யப்பா நகர், 1ஆவது தெரு, சர்வே எண் 81/1 & 82 பாகம், T.S.எண். 7 / IB & 7 / 1042 புதிய சர்வே எண்.82/7 அயப்பாக்கம் கிராமம், அம்பத்தூர், சென்னை-600077. பிரிக்கப்படாத பங்கு - 414 சதுர அடி மேல் கட்டுமானப்பரப்பளவு - 980 சதுர அடி மேலேமூடப்பட்ட கார்நிறுத்துமிடத்துடன் கூடியது	07-11-2019	22-11-2024	74,43,909/-	35,00,000/-
4	TN0050610002266 T விக்னேஷ்ராஜா (கடன்தாரர்) L மஞ்சுளா (கூட்டுக் கடன்தாரர்)	பிளாட் எண்.13, ஷம்ரோக் பில்டர்ஸ், ஃபிளாட் எண். S2, 2ஆவது தளம், இங்க்லீஷ் எலக்ட்ரிக் நகர், சர்வே எண். 18/1B பாகம் & 18/1C பாகம், T.S.எண். 7/1B &7 /10A2, நெமிலிச்சேரி கிராமம், தாம்பரம் வட்டம், சென்னை-600044. பிரிக்கப்படாத பங்கு - 450 சதுர அடி மேல் கட்டுமானப்பரப்பளவு - 925 சதுர அடி மேலேமூடப்பட்ட கார்நிறுத்துமிடத்துடன் கூடியது	05-09-2019	21-12-2024	73,11,178/-	42,52,000/-
5	TN0050610002651/ M சத்யநாராயணன் (கடன்தாரர்) M லலிதா (கூட்டுக் கடன்தாரர்)	பிளாட் எண். 12 (கிழக்கு பகுதி), ஸ்ரீ சக்தி சாய்ராம் நகர் அனெக்ஸ், சர்வே எண். 289, ஆயத்தூர் கிராமம், வேப்பம்பட்டு, திருவள்ளூர் வட்டம் & மாவட்டம்-602024 நிலப் பரப்பளவு : 750 சதுர அடி, மேல்கட்டுமானப்பரப்பளவு : 595 சதுர அடி (2 Bhk)	21-11-2022	08-10-2024	32,58,690/-	21,64,500/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் : 26.05.2025 இணையத் தளம் (https://www.bankauctions.in)-இல் பிற்பகல் 03.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை ஒவ்வொரு முறையும் எண்ணிலிடங்கா 5 நிமிட தன்னியல்பு கால நீட்டிப்புடன்.

ஒப்பந்தப்புள்ளி / முத்திரையிட்ட ஏலப்புள்ளியை பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் டேவணித்தொகை மற்றும் KYC ஆவணங்களுடன் இணைய வழியிலோ அல்லது மேற்குறிப்பிட்ட GICHFL-இன் அலுவலகத்தில் சமர்ப்பிக்க கடைசி தேதி : 23.05.2025 நாளன்று பிற்பகல் 05.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு.

மேற்சொன்ன சொத்துக்கள் / சொத்துக்களின் மின் ஏல விற்பனைக்கான இந்த பொது அறிவிப்பு (சர்ஃபாசி சட்டம் 2002 மற்றும் அதன் கீழான விதிகளின் படியிலான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்ட) தொடர்பாக, முத்திரையிட்ட உறை/உறைகளிலிட்ட விலைப்புள்ளிகளாகவோ அல்லது இணைய வழியிலோ மேற்சொன்ன சொத்துக்களை "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் வாங்குவதற்கான விலைப்புள்ளிகளை GICHFL வரவேற்கிறது.

ஏல விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:-

1. மின்னணு ஏலமானது "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருப்பவை எல்லாம்" மற்றும் "எந்தவிதத்திலும் திருப்பு பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில், 'இணைய வழியில்' நடத்தப்படும். மின்னணு ஏலமானது GICHFL ன் அங்கீகரிக்கப்பட்ட மின்னணு ஏல சேவைதாரர் "M/s.4 closure" மூலம் நடத்தப்படும்.
2. விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது பெயர்களை வலைதளம் https://bankauctions.in/-ல் பதிவு செய்து, தங்களது பயன்படுத்துநர் பெயர் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை இலவசமாக பெற்றுக்கொள்ள வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் இணையவழி ஏலத்திற்கான இணையவழிப் பயிற்சியை சேவை வழங்குநரான M/s. 4 Closure, #605A, 6ஆவது தளம், மைத்ரிவனம், அமீர்பேட்டை, ஹைதராபாத்-500038, தெலங்கானா-இடமிருந்து பெறலாம். தொடர்புக்கு: அலுவலக தொலைப்பேசி எண். 040-23736405 உதவி அணி: 8142000062 / 66, திரு.பிரகாஷ் 8142000064/ 8142000725 prakash@bankauctions.in திரு தினேஷ், அலைபேசி எண். 8142000735 மற்றும் மின்னஞ்சல் முகவரி: dinesh@bankauctions.in GICHFL தொடர்பு விபரங்கள்: 9894601538 & 9840873746
3. மின் ஏல விற்பனையானது சர்ஃபாசி சட்டம் / விதிகள் 2002 ல் பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் இதன் கீழ்க்குறிப்பிட்ட / வலைதளத்தில் உள்ள மற்றும் விருப்பமுள்ள / பங்கேற்கும் ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைப்புள்ளி / ஏலப்புள்ளி ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.
4. ஒவ்வொரு ஏலதாரரும் இணைய வழி மின் ஏலத்தில் பங்கேற்க தத்மது சொந்த மின்னஞ்சல் முகவரியை கொண்டிருக்க வேண்டும்.
5. GICHFL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் முன்பு, ஒருமுறை விருப்பமுள்ள ஏலதாரர் முறையாக ஒரு தகுதியுற்ற ஏலதாரராக பதிவு செய்துவிட்டால், அவர் ஆவணங்களை சமர்ப்பித்து மின் - விலைகோரல் தளத்தில் பங்கேற்க தமது விருப்பத்தை தெரிவிக்க வேண்டும். மின் ஏல சேவை வழங்குநரிடம் இருந்து உள்நுழை அடையாளப் பெயர் மற்றும் கடவுச்சொல்லை பெறுவது ஏலதாரரின் / இணையவழி ஏலதாரரின் முழு பொறுப்பாகும்.
6. மேற்சொன்ன சொத்துக்கள் இதன் மேற்குறிப